# சுவாமி அருணகிரி நாதர் வழக்கு.

## பாரிஸ்டர் ரங்கராமாநுஜம் வாதம்

(ஒரு நிருபர்)

சென்னை, ஜுலை. 6

சென்னையில் இந்தி எதிர்ப்பு சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டு ரிமாண்டிலிருந்து வரும் அருணகிரி சுவாமிகள் மீது க்ரிமினல் சட்டத்திருத்தச் சட்டத்தின் 7-1 (a) உட்பிரிவின் படியும், இ. பி. கோ 117-வது செக்ஷன் படியும் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு இன்று எழும்பூர் 3-வது மாகாண மாஜிஸ்திரேட் தோழர் மாதவராவ் அவர்கள் முன் தொடர்ந்து விசாரிக்கப்பட்டது. சுவாமிகள் சார்பாக ஆஜரான பாரிஸ்டர் ரங்காமானுஜ முதலியாரவர்கள் விவரித்ததின் சுருக்கம் வருமாறு,-

1932-வது வருஷத்திய சட்டப்படி அதன் 3-வது விதிக்கு 3 வருஷந்தான் ஆயுள் என்று விதிக்கப்பட்டிருந்தது. 1935-ம் வருஷம் அந்தச் சட்டமே மேலும் மாற்றியமைக்கப்பட்டது. அதன் மூலம் ஷை 3-வது விதியின் ஆயுள் வளர்ந்தது. ஆனால் இந்த 1935-ம் வருஷத்திய திருத்தச் சட்டம் 1937-ம் வருஷம் மூழுதும் ரத்தாகி விட்டது. எனவே 1932-ம் வருஷத்திய சட்டம் அசல்படி அப்படியே அமுலிலிருந்து வருகிறது. ஆகையால் அதன் 3-வது விதி செத்துப்போய் விட்டது.

### விளம்பரம் இல்லை.

சட்டத் திருத்தம் ஏதேனும் ஏற்பட்டால் அதை சர்க்கார் கஜெட் மூலம் பிரசுரிக்க வேண்டும். இங்கே இந்தத் திருத்தச் சட்டம் பிரசுரிக்கப்படவில்லை. அங்ஙனம் பிரசுரிக்கப் பட்டிருந்தால், அதை பிராஸிக்யூஷன் தரப்பில்கோர்ட்டில் தாக்கல் செய்திருக்க வேண்டும். அன்றியும் இந்த வழக்கிற்கே ஆதிமூலமாயுள்ளதும் இந்தியைக் கட்டாயபாடமாகப் பள்ளிக்கூடங்களில் புகுத்துவதுமான சர்க்கார் உத்திரவையும் பிராஸிக்யூஷன்தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

மாஜிஸ்திரேட்:- அவற்றைத் தாக்கல் செய்தத்தான் வேண்டுமென்பதற்கு என்ன விதி?

வக்கில்:- பண்டித மோதிலால் நேரு மீது 124 ஏ. செக்ஷன்படி குற்றம் செய்ததாக 1931ம் வருஷம் கொண்டுவந்த வழக்கில் இப்படிப்பட்ட தஸ்தாவேஜிகளைக் கோர்ட்டில் சாட்சியங்களாகத் தாக்கல் செய்ய வேண்டுமென்று அலகாத் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கின்றனர்.

கட்டாய பாடமாக இந்தியை புகுத்துவது சர்க்கார் உத்திரவேயொழிய ராஜகோபாலாச்சாரியார் தனிப்பட்ட முறையில் உத்திரவிட வில்லை. எனவே அவரது சொந்தக் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள ஒட்டாதபடி எத்தகைய காரியமும் என் கட்சிக்காரர் கோரியிருக்கிறார் என்று மெய்பிக்கப்படவில்லை. இந்த விதி தனிப்பட்ட நபர்களைத்தான் குறிப்பிடுகிறதே யொழிய சர்க்கார் உத்தியோகஸ்தரான முதன் மந்திரியைக் குறிப்பிடாது.

சர்க்கார் நடவடிக்கைகளைக் கண்டிக்கச் சட்டம் இடந்தருகிறது. ஆனால் அக்கண்டனம் சட்டவரம்பை மீறியதாக மட்டும் இருக்கக் கூடாது. என் கட்சிக்காரர் பிரசங்கங்கள் சட்டவரம்பை மீறியதாகவேயில்லை.

இ. பி. கோ 117 வது செக்ஷன்படியும் என் கட்சிக்காரர் வழக்கிற்கு உள்ளாகியிருக்கிறார். ஒரு குற்றம் செய்யும்படி தூண்டுவோர்கள் தான் இந்த செக்ஷனுக்கு உள்ளாவர்கள். என்து கட்சிக்காரர் அங்ஙனம் எதுவும் செய்ததாக மெய்ப்பிக்கப் படவில்லை.

பிறகு இ. பி. கோ 40 வது செக்ஷன்படி இந்த இரு விதிகளும் பிராஸிக் யூஷன் தரப்பிற்கு ஆதாரமாகாவென்றும், அந்த செக்ஷன் படி இந்தியன் பினல் கோட், விசேஷச் சட்டங்கள், ஸ்தல ஸ்தாபனச் சட்டங்கள் ஆகியவை மட்டுந்தான் உட்படுமென்றும், கிரிமினல் சட்டத் திருத்திருத்தச் சட்டம் இவற்றிற்குட்பட்டதென்று தோழர் முதலியார் கூறினார்.

மாஜிஸ்டிரேட்:— ஏன் அது விசேஷச் சட்டங்களுக்கு உட்படாது?

வக்கீல்:— கலால் காட்டிலாக்கா, உப்பிலாக்கா, வருமானவரி இலாக்கா போன்ற விசேஷ இலாக்காக்கள் சம்பந்தமான குற்றங்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட சட்டங்கள் தான் விசேஷச் சட்டங்கள் எனப்படும். இதற்காதாரமாகப்பலமேற்கோள்களைக் குறிப்பிட்டார்.

இனி என் கட்சிக்காரர் செய்துள்ள பிரசங்கங்களை மொழிபெயர்க்கும் போது மிகக் கடுமையான ஆங்கிலப் பதங்களை உபயோகித்திருக்கிறார்கள். தமிழ்ப்பதங்களின் தத்துவத்தை உக்கிரப்படுத்துகின்றன. கோர்ட்டாரவர்கள் இந்த உண்மையை மனத்தில் பதித்துக்கொள்ள வேண்டுமென்றுவேண்டுகிறேன். பலஹைகோர்ட்டு வழக்குகளை உதாரணமாக எடுத்துக் காட்டினார்.

மற்றும், சட்டத்தை மீறுவதாக உத்தேசமில்லையென்பதை சுவாமி அருணாகிரி நாதர் வெளிப்படையாகக் கூறியிருக்கிறாரென்றும் அவருடைய கருத்தெல்லாம் தமிழ் வாழ வேண்டுமானால், இந்திமொழியைக் கட்டாயப்பாடமாக வைக்கக்கூடாதென்பது தானேயொழிய எத்தகைய குற்றமும் செய்யவேண்டும் என்னும் எண்ணம் கிஞ்சித்துங் கிடையாதென்றும் கூறினார்.

அன்றியும் சுவாமிகள் தம் பிரசங்கத்தில் சாமபேத தானத்தைக் கையாண்டும்பயனில்லையென்று விளக்கிக் கூறினார்.

சுவாமிகள் பிரசங்கங்கள் அனைத்தையும் நேர்மையான முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பரிசீலனை செய்த பிறகுதான் எந்த விதமான முடிவிற்கும் வர முடியுமென்று மாஜிஸ்திரேட்டு குறிப்பிட்டார்.

எதிர்கட்சி விவாதம் முடிந்தவுடன் பிராசிக்யூடிங் இன்ஸ்பெக்டர் எதிரி வக்கீல் ஆட்சேபணைகளுக்குப் பதில் கூறினார்.

வழக்கு 8ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறதாக மாஜிஸ்திரேட் குறிப்பிட்டார்.

## சேலத்தி



சென்ற 1—7—38-ந்